**ஆணி 20, 2019 -- வழிபடுத்து குழு சந்திப்பு**

இராமச்சந்திரன் ரொறன்ரோவில் உள்ள சீன, கோரிய, அர்மீனிய சமூக மையங்களில் தனது நேரடிச் சந்திப்பு மற்றும் பார்வையிடல் மூலமாகக் கண்டறிந்த பூர்வாங்க ஆய்வுகளைக் குழுவுடன் பகிர்தலோடு சந்திப்பை ஆரம்பித்தார். தமிழ்ச் சமூக மையத்துக்கான நிர்வாகப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் சமூகத்தினைச் சென்று அணுகித் தாம் அவர்களிடம் இருந்து இதுவரை பெற்ற பின்னூட்டங்களில் இருந்து கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்களை குழு உறுப்பினர்கள் பகிர்ந்து கொண்டார்கள். இராமச்சந்திரன் இதற்கான ஒரு நிர்வாக மாதிரியைத் தயாரித்து குழுவின் மதிப்பாய்வு மற்றும் திருத்தங்களுக்காகச் சமர்ப்பிப்பார்.

விமலச்சந்திரன் ரொறன்ரோ நகராக்கம் - கிரியேட் ரொறன்ரோவுடன் இதுவரை நடந்த உரையாடல்களை பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டார். ரொறன்ரோ நகரத்திலிருந்து எமது திட்டத்துக்கான காணி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான அடுத்த கட்டப் படிமுறைகள் விவாதிக்கப்பட்டன. அவையாவன: கூட்டுத்தாபன ஆவணக் கடிதம் பெறுதல், வணிக மாதிரியை உருவாக்கல், முக்கிய தொடர்புகள், சட்டத்தரணி ஒருவரைத் தேர்வு செய்தல் என்பனவாம்.

ராங், விமலச்சந்திரன், சண் ஆகியோர் நகரசபை உறுப்பினர்களான லாய், குரோபோர்ட, மக்கேல்வி ஆகியோருடனான தமது சந்திப்புகளை பற்றிய தகவல்களைப் பகிர்ந்தனர். இம் மூன்று நகரசபை உறுப்பினர்களும் எமது திட்டத்திற்கு மிக்க ஆதரவு காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குழுவின் உறுப்பினர்கள் யாவரும் சமூகத்துக்கு இத்திட்டம் பற்றி எடுத்துச்செல்லும் தத்தம் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டனர். தமிழ்ச் சமூக மையம் சம்பந்தமான இணைய மூலம் கருத்துக்கணிப்புப் படிவத்தையும், பகிரங்க பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பையும் தமது சமூக ஊடகங்களின் ஊடாகப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக்கொண்டனர். நகரசபை மண்டபத்தில் நடாத்தத் திட்டமிட்டுள்ள பகிரங்கஆலோசனைக் கூட்டத்துக்கு முன்னராக 1000 கருத்துக் கணிப்புகளையும் 100 சமூக அமைப்புகளின் ஆதரவுக் கடிதங்களையும் பெறும் இலக்கு வைத்துச் செயற்படுவதற்கு இணங்கினர்.